# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2022

### வாசிப்பு – உயர் பிரிவு (10ஆம் 11ஆம் 12ஆம் தர மாணவர்கள்)

# வாசிப்புப் பழக்கம்

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு"

என்பது வள்ளுவர் வாக்கு. மணற்கேணியை தோண்டத் தோண்ட ஊற்று நீர் சுரந்து சுரந்து கொண்டுவருவது போல நாம் நூல்களைக் கற்கக் கற்க அறிவு சுரந்து கொண்டேவரும். சுரந்து வரும் அறிவு மனிதனைப் பூரணமடையச் செய்யும்.

மனிதன் மனிதனாக மதிக்கப்படவேண்டுமாயின் அவன் கல்வி அறிவினைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும். கல்வியறிவைப் பெற்றுக்கொள்ள பல வழிகள் இருப்பினும் நல்ல நூல்களை வாசித்து அறிவைத் தேடலே சிறந்த வழியாகும். பள்ளிப் படிப்பில் குறிப்பிட்ட சில நூல்களே இடம்பெறுகின்றன. அவற்றைக் கற்று ஒரு மாணவன் வல்லவனாக மாட்டான். கற்கும் மாணவன் பாட நூல்களோடு துணை நூல்களையும் கற்பதனால் பரந்த அறிவைப் பெறமுடியும்.

நூல்கள் பலதரப்பட்டவை. வரலாறு, சமயம், மொழி, தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைகதை, நாவல், விளையாட்டு, சஞ்சிகை எனப் பல்வேறு வகைப்பட்ட நூல்கள் உள்ளன. இவற்றை தமது விருப்பத்திற்கு ஏற்ப தெரிவுசெய்து படிக்கவேண்டும். "கல்வி கரையில கற்பவர் நாள் சில மெல்ல நினைக்கிற பிணிபல" என்கிறது நாலடியார். எனவே வாழும் நாளில் எல்லையில்லாத கல்வியைத் தெரிவுசெய்து கற்றல் வேண்டும்.

சிலர் பள்ளிப் படிப்போடு கல்வி முடிகிறது என எண்ணுகின்றனர். இது தவறான கருத்து ஆகும். ‘‘சாந்துணையும் கல்’’ என்றார் வள்ளுவர். ‘‘பாடை ஏறினும் ஏடது கைவிடேல்’’ என்றார் ஔவையார். படித்துப் பட்டங்கள் பெற்றுச் சட்டங்கள் ஆக்கினாலும் தொடர்ந்து படிக்கவேண்டும்.

நல்லாசானாக அறிவு புகட்டும் நூல்கள் அருகில் இருக்கும்போது அவற்றைப் பயன்படுத்தத் தவறக்கூடாது. நல்ல நூல்களே நல்ல நண்பர்கள் என உணர்ந்து நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ‘‘இளமையிற் கல்வி சிலையில் எழுத்து’’ என்ற ஔவையின் அறிவுரைக்கு ஏற்ப வளரும் சமுதாயம் வாசிப்பை தமது தலையாய கடமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.